எங்களுடைய பகுதியான சிவகாசி பகுதியிலே குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர் என்று பொதுவாக தமிழகம் முழுவதும், உலகம் முழுவதும் ஒரு கருத்து உள்ளது. அந்தத் தொழிலாளர்கள் இல்லாத ஒரு நிலைமையை உருவாக்கிட குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் காமராஜர் மாவட்டத்தில இந்த ஆண்டே நடைமுறைப்படுத்தப்படுமா? அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்த ஆண்டு இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு இயலாது என்று தெரிவித்திருக்கிற காரணத்தினால் 1993-94 ஆம் ஆண்டு இத்திட்டம் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 603, டாக்டர் ஜி. ஆர். மாலா. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

603—

உள்நிறுவன தொழிற்பயிற்சிக் கண்காட்சி தமிழ்நாட்டில் நடத்த நடவடிக்கை.

*2467. டாக்டர் ஜி. ஆர். மாலா:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் பெங்களூரில் நடைபெற்ற உள்நிறுவன தொழிற்பயிற்சி (In company Vocational Training) கண்காட்சி போன்று தமிழ்நாட்டிலும் நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் பெங்களூரில் நடைபெற்ற உள்நிறுவன தொழிற்பயிற்சி (In Company Vocational Training) கண்காட்சி போன்று தமிழ்நாட்டிலும் நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு ஜூலை 1991ம் ஆண்டு பெங்களூரில் இதுபோன்ற கண்காட்சி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தால் நடத்தப்படவில்லை என்று பெங்களூரில் உள்ள வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை துணை இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் இது போன்ற கண்காட்சி தமிழ்நாட்டில் நடத்தும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

1992 ஏப்ரல் 23]

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில எஜுகேட்டட் அன்எம்ப்ளாய்ட் எண்ணிக்கை 1980 ஆம் ஆணடில 5.58 லட்சமாக இருந்தது. தற்போது 1991 ஆம் ஆண்டில் 18.01 லட்சமாக உயர்நதுள்ளது படித்து வேலையில்லாதவர்கள் Unemployed graduates both Arts and technically qualified graduates, போன்றவர்கள் படிப்பு இருந்தும், எண்ணற்ற தனிப் பிரிவுகளில் பட்டம் பெற்று இருந்தும், தங்களுடைய திறமைகளை வெளிக் கொணர இயலாததாலும், பண வசதி இனமையாலும், தத்தம் திறமைகளைத் தங்களுக்கும், தன் நாட்டுக்கும் நனமை பயக்கும் வழிமுறைகளை ஊக்குவிக்கும் வண்ணம் best education-cum-training media வாக அமைய இருக்கும் இந்த in-Company vocational training அநத முறையிலே படித்து வேலை இல்லாத இளைஞர்களுக்கு எம்ப்ளாய்மெண்ட் மற்றும் டிரெயினிங் கொடுக்கும் வகையில் நமது தமிழகத்தில் நடப்பு ஆண்டில் நடத்த அதை மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்ற ஒரு கண்காட்சி நடத்தப்படவில்லை என்று மாபங்களுரில் உள்ள வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை துணை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள என்று ஏற்கனவே தெரிவித்து இருக்கிறேன். எனவே, அது போன்று எங்கு நடக்கிறது என்று சொன்னால் அதைப் பார்த்து அதுபோன்று பயிற்சி கொடுக்கின்ற ஒரு கண்காட்சியை நடத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமாதிரி டிரெயினிங் அதாவது வொக்கேஷனல் டிரெயினிங் என்று சொல்லப்படுவது என்றால் அதற்கு கட்டாயம் அவர்களுக்கு பயிற்சி கொடுக்கும் வண்ணம்தான அமைந்து இருக்கவேண்டும். ஆகவே, அப்படி அந்த கண்காட்சி அங்கே நடைபெறாவிட்டாலும் நமது தமிழகத்தில் தொழில் துறையில் தமிழகம் முதன்மையாக விளங்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையோடு புதிய தொழில் கொள்கையை அறிவித்து இருக்கிற நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இதுமாதிரியான படித்து வேலையில்லாத இளைஞர்களை தொழில் துறையில் ஊக்குவிக்கும் வண்ணம் தமிழகத்திலே இதுவரை எந்த ஆட்சியிலும் நடத்தப்படவில்லை என்பதை முறியடிக்கும் வண்ணம் தமிழக ஆட்சியின் வரலாற்றில் முதன் முதலாக நடத்தப்படும் பெருமைக்கு . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ஜி. ஆர். மாலா : எடுத்துக்காட்டாக விளங்கும் வண்ணம் வரலாற்றிலும் சரி, ஆன்மிகத்திலும் சரி, தொழில் துறையிலும் சரி, முன் மாதிரியாக விளங்கி ஆட்சி புரியும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களின் சாதனை மகுடத்தில் மற்றும் ஒரு மாணிக்கமாக விளங்கும். அந்த மாதிரி ஒரு கண்காட்சியை மாண்புமிகு தொழில துறை அமைச்சர் அவர்கள் தீர விசாரித்து அதை நம்முடைய தமிழகத்தில் நடத்த முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்காட்சியை நடத்தித் தான் அவர்களுக்கு தொழில் பயிற்சியை கொடுக்கவேண்டிய நிலையிலே இல்லை. ஏன் என்றால் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே தொழில் பயிற்சிப் பள்ளியிலே படிக்கிறவர்களுக்கு உரிய வாய்ப்புகள், பயிற்சிகள் அங்கே கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 604, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

604—

பேரணாம்பட்டு தொகுதியில் தொழிற்கல்விக் கூடம்.

*8273 டாக்டர் ஜெ. பரந்தாமன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேரணாம்பட்டு தொகுதியில் தொழிற்கல்விக் கூடம் (ஐ. டி. ஐ.) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொன்னது உண்மையாகவே எனக்கு வருத்தமாக